ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2389/12 - 2024 ජූනි මස 19 වැනි බදාදා - 2024.06.19

*2389/12 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16(2 ஈ) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்**

*உத்தேச 113 அறைகள் கொண்ட சுற்றுச் சூழல் சுற்றுலா விடுதித் திட்டம் – எருமைத்தீவு, கல்பிட்டி*

**சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலக்கம் 500/5, தலபத்பிட்டிய வீதி, மாதிவெல, கோட்டை எனும் முகவரியுடைய கன்சல்டின் இன்ஜினியர்ஸ் அன்ட் ஆர்கிடெக்ட்ஸ் அசோசியேடட் தனியார் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட புத்தளம் மாவட்டத்தின் கல்பிட்டி, எருமைத்தீவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள 113 அறைகள் கொண்ட சுற்றுச் சூழல் சுற்றுலா விடுதித் திட்டத்திற்கான சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொது மக்கள் பார்வைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நாளாந்தம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரை 2024.06.19 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்கள் தவிர).*

*அதற்கு மேலதிகமாக, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான* www.coastal.gov.lk *ஊடாக அவ்வறிக்கை மூன்று மொழிகளிலும் பார்வைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.*

*(1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 12 ஆம் மாடி, "செத்சிரிபாய", கட்டம் 2, பத்தரமுல்லை*

*(2) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், 4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10*

(3) மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை
(4) வனப் பாதுகாப்புத் திணைக்களம், "சம்பத் பாய", பத்தரமுல்லை
(5) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை, மாளிகாவ, குருணாகல்
(6) மாவட்ட செயலகம், புத்தளம்
(7) பிரதேச செயலகம், கல்பிட்டி
(8) பிரதேச சபை, கல்பிட்டி
(9) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், மாவட்ட அலுவலகம், புத்தளம்
(10) கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், பிரதேச செயலகம், காக்கபள்ளி, சிலாபம்

இந்த உத்தேச திட்டத்தினால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான பொது மக்கள் அபிப்பிராயங்களை 2024.06.19 ஆந் திகதி முதல் 30 நாட்களினுள் (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்கள் தவிர)கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொறியியலாளர் **ஆர். ஏ. எஸ். ரணவக**,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
புதிய செயலகம்,
4 ஆம் மாடி,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 011-2449754, 011-2387922, 011-2449197.
பெக்ஸ் இல. : 011-2438005, 011-2472623.

EOG 06-0114

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.